யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை – 2020 – தரம் 7
**First Term Examination – 2020 – Grade 7**

| | | | | |
|---|---|---|---|---|
| கத்தோலிக்கத் திருமறை I, II<br>Catholicism I, II | 14 | T | I, II | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |

சுட்டெண் Index No

## கத்தோலிக்கத் திருமறை

### பகுதி I

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

1. 'நபி' என்பது இறைவாக்கினரை குறிக்கும் எம் மொழிச்சொல்
   1. கிரேக்கம்  2. இலத்தீன்  3. எபிரேயம்  4. ஆங்கிலம்
2. பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் …… முக்கிய பிரிவினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர்
   1. நான்கு  2. மூன்று  3. இரண்டு  4. ஐந்து
3. சிறிய இறைவாக்கினரில் ஒருவர்
   1. ஆமோஸ்  2. எசேக்கியேல்  3. எரேமியா  4. எசாயா
4. சாம் எத் திருவருட் சாதனத்தின் மூலம் திருச்சபைக்குள் இறைவாக்கினராக அருட்பொழிவு செய்யப்படுகின்றோம்
   1. குருத்துவம்  2. உறுதிப்பூசுதல்  3. திருமுழுக்கு  4. நற்கருணை
5. உரியாவின் மனைவி பெயர்
   1. பத்சேபா  2. ரூத்  3. றெபேக்காள்  4. நெயோமி
6. நாத்தான் இறைவாக்கினர் தனது மதிநுட்பத்தால் நல் வழிப்படுத்திய அரசன்.
   1. தாவீது  2. சவுல்  3. சாலமோன்  4. ஏரோது
7. பஞ்சகாலத்தில் இறைவாக்குப் பணி புரிந்தவர்.
   1. எலிசா  2. எலியா  3. நாத்தான்  4. எசாயா
8. நாமானின் தொழுநோயை குணமாக்கிய இறைவாக்கினர்.
   1. எலிசா  2. எலியா  3. எரேமியா  4. எசாயா
9. எசாயா என்ற பெயரின் அர்த்தம்
   1. இறைவன் உயர்த்தி உள்ளார்  2. இறைவன் மீட்டுள்ளார்
   3. இறைவன் மீட்கிறார்  4. இறைவன் இரக்கமுள்ளவர்
10. இறைவாக்கினர் எரேமியா வாழ்ந்த காலம்.
    1. கி.மு 8ம் நூற்றாண்டில்
    2. கி.மு 7 – 6 வது நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில்
    3. கி.மு 6ம் நூற்றாண்டில்
    4. கி.மு 3ம் நூற்றாண்டில்
11. இறைவாக்கினர் எசேக்கியேலின் தந்தையின் பெயர்.
    1. ஆமோஸ்  2. ஹில்கியா  3. பூசி  4. சிமியோன்
12. இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பில் ஆலயம் எனப்படுவது
    1. இறைவனின் பிரசன்னம் உள்ள தூய்மையான மாளிகை
    2. மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மாளிகை
    3. பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மாளிகை
    4. இறைமக்களால் போற்றப்படுகின்ற மாளிகை
13. இறைவாக்கினர் ஆமோஸின் ஊர்
    1. கானான்  2. பெத்தெல்  3. யூதாவில் தெக்கோவா  4. ஒரேப்மலை
14. தமது திருமணவாழ்வை இறைவாக்கு செய்தியாக ஆக்கியவர்
    1. இறைவாக்கினர் ஆமோஸ்  2. இறைவாக்கினர் ஓசேயா
    3. இறைவாக்கினர் யோனா  4. இறைவாக்கினர் எலியா

15. யோனா மீனின் வயிற்றில் எத்தனை நாட்கள் இருந்தார்.
1. 5 நாட்கள் 2. 3 நாட்கள் 3. 2 நாட்கள் 4. 4 நாட்கள்

16. இறைவனுடைய அழைப்பை ஏற்காத இறைவாக்கினர் யோனா எங்கே புறப்பட்டார்.
1. தர்சு 2. தர்சீசு 3. தமஸ்கு 4. எகிப்து

17. ஆபிரகாமின் அழைப்பு காணப்படும் நூல்
1. விடுதலைப் பயணம் 2. எண்ணிக்கை 3. தொடக்கநூல் 4. லேவியர்

18. வாக்களிக்கப்பட்ட நாடு
1. பபிலோனியா 2. நினிவே 3. கானான் 4. மிதியான்

19. சமூக நீதியின் இறைவாக்கினர்.
1. இறைவாக்கினர் மலாக்கி 2. இறைவாக்கினர் ஆமோஸ்
3. இறைவாக்கினர் ஆகாய் 4. இறைவாக்கினர் ஓசேயா

20. நாமான் எந்த மன்னனின் படைத்தலைவன்
1. ஏரோது மன்னன் 2. சிரியா மன்னன் 3. எகிப்திய மன்னன் 4. பிலிஸ்திய மன்னன்

$(\mathbf{20x2 = 40})$

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. (i) இறைவாக்கினர் என்பதன் அர்த்தம்?

(ii) தற்கால சமூகத்தில் இறைவனின் குரலாக திகழும் நபர்கள் யாவர்?

(iii) ஓர் இறைவாக்கினராக நீர் செய்யக்கூடிய ஐந்து செயல்களை எழுதுக?

$(\mathbf{3 + 3 + 6 = 12})$

02. (i) இறைவாக்குரைப்போர் மூவரின் பெயர்களை குறிப்பிடுக?

(ii) எலிசா எலியாவிடம் வந்த போது என்ன செய்தார்?

(iii) நீங்கள் இறை பராமரிப்பை அனுபவித்த சந்தர்ப்பங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

$(\mathbf{3 + 3 + 6 = 12})$

03. (i) பெரிய இறைவாக்கினர் மூவரின் பெயர்களை குறிப்பிடுக?

(ii) 'யாரை நான் அனுப்புவேன்' என்ற தலைவரின் குரலுக்கு எசாயா என்ன பதில் அளித்தார்?

(iii) ஆலயத்தின் கௌரவத்தை பாதுகாப்பதற்கு உங்களால் செய்யக்கூடிய 5 செயற்பாடுகளை எழுதுக

$(\mathbf{3 + 3 + 6 = 12})$

04. (i) மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற இறைவன் தேர்ந்தெடுத்த முதலாவது நபர்?

(ii) ஆபிரகாம் முகங்கொடுத்த சவால்கள் எவை?

(iii) ஆபிரகாமின் அழைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய முன் மாதிரிகைகள் ஐந்தினை குறிப்பிடவும்.

$(\mathbf{3 + 3 + 6 = 12})$

05. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) துயருறுவோர் ஆண்டு
2) தலைமை ஆயர் 1ம் பிரான்சிஸ்
3) திருச்சபையில் பொதுநிலையினர்
4) அன்பிய குழும வாழ்வு

$(\mathbf{6 + 6 = 12})$